செய்தி வெளியீடு எண்:365 நாள் : 22.07.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணிஅவர்கள் ஆய்வு.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் சாலைப் பணிகள், குடிநீர் வழங்கல் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், புதிய தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகள் மீது தனிகவனம் செலுத்தி, விரைந்து முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வேண்டும் எனஅறிவுரை வழங்கினார்.

மேலும், சென்னை மாநகரப் பகுதிகளில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் உள்ள நீர் இருப்பு குறித்தும், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களின் மூலம் வழங்கப்படும் குடிநீர் குறித்தும், கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் குடிநீர் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் சீரான குடிநீர் விநியோகத்திற்காக தற்போது எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். சென்னை மாநகராட்சிப்

பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் சமச்சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும் சென்னை தவிர்த்த அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இப்பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பருவமழைக் காலத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பகுதிகளில் டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான **“அம்மா உணவகம்”** திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். **“அம்மா உணவகங்களில்** வழங்கப்படும் உணவு வகைகள் தரமானதாக உள்ளதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார். **“ அம்மா மக்கள் சேவை மையம்”** திட்டத்தின் மூலம் பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகள், சொத்து வரி மற்றும் தொழில் வரி விதிப்பு, கட்டட வரைபட அனுமதி உள்ளிட்ட மக்கள் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து சேவைகளின் கீழ் பொது மக்கள் கோரும் விண்ணப்பங்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை பொருட்டு அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஒரே நாளில் **“அம்மா மக்கள் சேவை மையங்களை”** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்க தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மேதகு அளுநரின் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர் கூட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட சிறப்பு அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். அனைத்து

அறிவிப்புகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் முதன்மை செயலர் திரு.விக்ரம் கபூர், இஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.பி. சந்தரமோகன், இஆப., செயல் இயக்குநர் திரு. என்.சந்தீப், இஆப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.சுவர்னா, இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சி.விஜயராஜ் குமார், இஆப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.ராஜேந்திர ரத்னூ, இஆப., சென்னை மாநகராட்சி துணைஆணையர் (பணிகள்) திரு கந்தசாமி, இஆப., துணைஆணையர் (சுகாதாரம்) திரு கண்ணன், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.